786

போசதலூர் ஸ்ரீ வீரப்பிரம்மம் அவர்கள்

தேலுங்கில் திருவாய் மலர்ந்தருளிய

கலியுக மகத்துவ

# காலக்கியானம்

9 4 APR 1924



இஃது

திருவைநகர் திருக்கன்னையரவர்கள் குமாரர் அனந்த

சுப்பய்யரவர்களால் தமிழில் பெயர்க்கப்பெற்று

மதுரை தாலூகா வில்லாபுரம் பி. கே. என். பொன்னு

சாமி பிள்ளை யவர்களசல் பதிப்பிக்சப் பெறறதை

திண்டுக்கல் தாலூகா சித்தரேவ் கிரமம்,

...கய்யதலி பாவலரவர்களால்

மதுரை

...க்டோரியா பிரஸில்

...ப்பிக்கப்பெற்றது.

1924 [அணா 1

இ22
N24.
183482

### கலியுக மகத்துவ

# காலக்கியானம்:

ஸ்லோகம்:

குருப்ரஹமகுரோர்விஷ்ணு குருதேவோமஹேஸ்வர:

குருஸாக்ஷாத்பரப்ரஹமம் தஸ்மைஸ்ரீ குருவேநம

துதி

ஸ்ரீ நாராயணமூர்த்தியேநம

ஸ்ரீ வீரபோகவசந்தராயநம

ஸ்ரீ சிதம்பரதீக்ஷதரேநம

ஸ்ரீ இராமயோகிஐயரேநம

ஸ்ரீ கனகதுற்கையம்பாள்நம

## சரித்திர வரலாறு.

போதலூர் ஸ்ரீவீரப்பிரம்மஸ்வாமிகள்சொல்லியதென்னவென்றால் முற்காலத்தில் பூவுலகில் பாவமென்பதே கிடையாது. இக்கலியுகத்தில் பாவமதிகமாதலால், பூமாதேவி பொறுக்கமுடியாமல் தேவேந்திரனிடம் முறையிட சசிபதி பூமாதேவியைத்தேற்றி சத்தியலோகத்திற்கேகுவோம் வாவென்றுடனே யப்பூமாதேவியைச் சகல தேவகணங்களோடுங் கூட்டியழைத்துக் கொண்டு சதுர்முகனிடம் சேர்க்க பூமாதேவி பிரம்மாவை வணங்கி ஓ தயாபரா பென் மனதினிடமாகக் குடிகொண்டிருப்பதை வெளியிடுகிறேன் சற்று கவனியுங்கள்.

உலகில் சகல ஜனங்களும் மாத்ஸர்யத்தைக்கொண்டு மூத்தோர் இளையோரென்னும் பயமில்லாமல் நிற்பயமாய் ஸ்வஜாதிதர்மத்தை விட்டு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவிடத்தில் பக்தியென்பதில்லாமல் அப்பரமாத்மாவின் பக்தர்களைத் தூஷித்தும், நிமித்யனைமித்யக் கிருத்தியங்களை விட்டு, மாத்ருபித்ரு குருசிச்ருஷைகளைக் கவனியாமல் வேதங்களின் மீது ஸ்ரத்தை யென்பதில்லாமல் அஸத்தியமே பெரிதாயென்னை பெரியோர்களை மதியாமல் தேவதைகளைத் தூஷித்தும் மித்திரத் துரோகிகளாகிய பொய் களவு சூது டம்பம் விபசாரமென்பதிலுழன்று வேதங்களை விக்ரயித்துஜீவஹிம்சை விளையாட்டெனவே செய்து க்ராமாதிகாரம் ஷை லோகாதிகாரத்திலும் பெரிதென்று, தேவதார்ச்சனை யக்ஞஹோமாதிகள் விரதங்கள் உபவாசங்களையுங்கெடுத்த கோக்களையும் விப்ரர்களையும் விஷ்ணுபக்தர்களையும் த்வேஷித்தலே ஸ்வபாவமாய் ஸ்ரீ ஹரிநாமஸ்மரணையைக்கேளாமல் ஹரிபஜனைசெய்யாமல் நிர்படர்களாய்மமதை கொண்டலைகிறார்கள். ஆதலால் இப்படிக்கொத்தவர்களை வைத்துபரிபாலிப்பது யெனக்குபெரும்கஷ்டமாயிருக்கிறது தாங்கள்தான் கிருபைகூர்ந்து என் கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று மிகவும் துக்காக்கிராந்தியாய் முறையிட்டு நின்றாள்

இப்படிக்கிருக்கச் சதானந்தன் பூமாதேவி செய்யும் ரோதனத்தைப் பார்த்துக் கிருபைகூர்ந்து ஓ கல்யாணி! இப்படிக்கொத்தவர்களைக்கொன்று உன்பாரத்தைக்குறைக்கும் மார்க்கத்தைச் செய்கிறேன். எல்லாக்காரியத்தையும் உபாயத்தினால் சாதிக்கவேண்டுமென்று சொல்லி சகல தேவதைகளும் பூமாதேவியும் ஸரஸ்வதி இந்திரன் இயமன் வருணன் வாயு குபேரன் நிருதி முதலிய 49 ஆயிரம் மகா புருடர்களும் கருடகாந்தர்வ சித்த வித்யாதரர்களும் சத்பவீரராகவஸ்வாமி, துவாதசாதித்யர்களும் தன் பின்பற்றிவர அன்னவாகனமேறிக் கைலையைச் சேர்ந்தார்.

இதை நந்திதேவன் வெகு சீக்கிரமாயோடி சாக்ஷாத் சங்கரமூர்த்திக்கறிவிக்க அவர் அவர்களை உள்ளுக்கழைக்கச் சகலரும் சென்று ஸ்ரீ பார்வதிஸமேதராயிருக்கும் சிவசங்கரமூர்த்தியைத் [illegible]த்து தமது முறைகளைச் சொல்ல அவர் பார்வதி

92472

யுடன் யோசித்து தேவர்களைப்பார்த்து நவநீதமென்னும் வெண்ணெ யையுண்ணும் கண்ணனே எங்கள் குறைகளைத் தீர்க்கவல்லவ ஆதலால் அவரிடம் செல்லுவோம் வாருங்கள் என்று புறப்பட்ட மாத்திரத்தில் தேவர்கள் மிகமகிழ்ந்து கடுவேகமாய் பிர்மாண்டத் தைக்கடந்து வைகுந்தத்தை யடைந்து ஸ்ரீநாதனிட அந்தப்புரத்தில் புகுந்து அங்கு ஸ்ரீ லெட்சுமி நாராயணனைத் தரிசித்து நமஸ்காரஞ் செய்து கைகூப்பிநிற்க ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியாகப் பட்டவர் மிகக் கிருபைகூர்ந்து அவர்களை வந்தகாரியமேதென வினவ, பிரம்ம தேவன் தன்னிரு கரங்களையுங் கூப்பி தந்தையே! தாம்துஷ்ட நிக்ரகம் செய்ய அவதரியுங்கள். ஏனெனில்; பூவுலகில் துஷ்டர்கள் அளவுக்கு மீறினார்கள். இளமை முதுமையென்னும் தாரதம்மிய மில்லாமல் கெட்டு விட்டது. நன்னீதிகிடையாது; முறைதப்பிப் போயிற்று தாரமென்றும் தாயென்றும் நினைக்காமல் நடக்கிறார்கள். ஸப்தகுல பர்வதங்களையும் சுமப்பதோடு இந்த துன்மார்க்கர்களை யும் சுமப்பது பெருங்கஷ்டமும் பாரமுமாயிருக்கிறதென்று பூமா தேவி முறையிடுகிறாளென்று சொல்லிப் பூமாதேவியைப் பார்க்க வும் பூமாதேவி ஸ்ரீலெட்சுமிபதிக்கு பஞ்சாங்க நமஸ்காரம் செய்து பக்தவத்ஸலா? பரம்புருஷா! ஆதிமத்யாந்தரகிதா! அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா! ஜெகதீஸ்வரா! இந்தக்கலியுகப் பிரமாணம் நான்கு லெட்சத்தி முப்பத்திரண்டு வருடங்கள் ஆகையால் இது வரையிலு சென்றுபோனது 4992 வருடம் ஆயுள் பிரமாணம்; இதில் பாவம் 3 பங்கும் புண்ணியம் 1 பங்குமாக ஏற்பட்டது. ஆதலாலினியென்னால் தாங்கமுடியாதென்று சொல்ல அது கேட்ட நாராயணன் பிரம்மாவையும் சங்கரனையும் பார்த்து நாம் மூவரும் இப்பொல்லாக் கலியுகத்தில் நரர்ப்பபிறந்து பூலோகத்தில் ராஜிய பரிபாலனஞ்செய்ய புண்யக்ஷேத்திரங்களில் தங்கி துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யவேண்டு மாதலால் நான் காஷ்மீர தேசத் தை யாளும் ஜெயசிங்கு ராஜனுக்கும் அவர் பத்னி திலகாம்பாளு க்கும் புத்ரனாகப்பிறக்கிறேன். பிரம்மதேவனே! நீர் ராமநகரத்தில் ராமயோகியாய்ப் பிறப்பீர், சங்கரனே! நீர் முனிக்கோடி அக்ர ஹாரத்தில் சிதம்பர தீட்சதராய் பிறப்பீரென்று ஆக்ஞாபித்து இந்திரன் சமுத்திரன் இயமன் குபேரன் சந்திரன் சூரியன் வாயு

அக்கினி பிருகஸ்பதிசுக்கிரன அஸ்வனி சாத்யுர்யட்சகர்காந்திருவர்
புஜகர் கின்னரர் முதலானவர்களைப் பார்த்து நீங்களுங்கள் அம்ஸங்
களால் பூலோகத்தில் என் பக்தர்களா யுற்பவியுங்களென்று
சொல்லி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்வதற்காக
வேண்டி கனக துர்க்கையம்பாளைப் பிறப்பித்து தத்தமிருப்பிடங்
களுக்கு போகவிடுத்துத்தான் காஷமீர தேசத்து ஜெயசிங்கு ராஜ
னுக்கும் திலகாம் பாளெனும் பதிவிரதாசிரோமணிக்கும் புத்தர
னாய் நஜன்மித்து காஷமீரதேசத்திற்கு ஈசானியத்தில் கௌரமீதிர
த்தில் கேதாரவனத்தில் ஓர் பிலத்தில் இறங்கி அங்கிருக்கு
மஹான்களைத் தெரிசித்து முகுளிதகஸ்தனாய் நின்று ஸ்தோத்
திரஞ் செய்கையில் அங்கிருந்த முனிவர்கள் கண் விழித்து
ப்பார்த்து இச்சிறு குமரன் யாரென்று அதிசயித்து யோகதிருஷ்டி
யால் ஆதிநாராயணஸ்வாமியே இப்படி யவதாரங்கொண்டு வந்தி
ருக்கிறாரென்றுணர்ந்து சந்தோஷங்கொண்டு அக்குழந்தையைப்
பூசித்து ஓய் ராஜதனயா! நீ ஐபாயிரங்கோடி பூமண்டலத்திற்கும்
ஏகச்சக்ரேஸ்பரனாக விளங்கப்போகிறாய். உன் பெயரென்ன வென்
றால் ஸ்ரீ வீரபோக வசந்தராயர் என்று சொல்ல அதுகேட்டு
அச்சிறுவன் ஓ முனிசிரேஷ்டர்களே! கருணைகூர்ந்து பலகலைகளை
யும் தனுர்வித்தையையும் எனக்கு கற்பியுங்களென்று கேட்க
முனிபுங்கவர்கள் அவ்வாறே கற்பிக்க அதை அவர் பழகிவந்தனர்.
அவ்வளவில் பிரம்மா ராமயோகியாய் ராமநகரத்திலும் சங்கரன்
சிதம்பரதீட்சதராய் மூனிக்கோடியக்ரஹாரத்திலும் பிறந்து வளர்
ந்து கொண்டிருந்தார்கள் இப்படிக்கிருக்க ஒருநாள் ராமயோகி
சிதம்பர தீக்ஷதரைப்பார்த்து காஸ்மீர தேசத்தில் ஸ்ரீமந் நாராயண
மூர்த்தி பிறந்து கௌதமீதிரித்தி லுள்ள ஷத்ரீகாஸரமத்திற்கு வந்து
அங்குள்ள பிலத்தில் யுகாந்தகாலமாய் வசித்துக் கொண்டிருக்கும்
முனிவர்களிடம் தனுர்வேதாதி சகல கலைகளையும் பழகி வருகிறா
ரென்று நாரத முனிவர் சொன்னாராகலால் நாம் சென்று தரிசித்து
வருவோம் வாருமென்று அழைத்துச் சென்று அங்குள ரிஷி
களைக்கண்டு இந்தக்குழந்தை இவ்விடம் இருக்கவேண்டிய காரணம்
என்னவென்று கேட்க அவர்கள் அதன் காரணத்தைச் சொல்லித்

தாங்களிருவரும் பிரம்மாவும் ருத்திரனுமன்றி வேறல்லவென்று
ரைக்க அப்போது அவ்விருவரும் சிரமேல் கரங்கூப்பி குழந்தை
வடிவமாகிய ஸ்ரீமந்நாயண மூர்த்தியைத்தொழுது நிற்க, "ஓய்
சங்கரரே நான் இனி கொஞ்சகாலத்தில் வருவேன். அதுமுதலந்தப்
பாபாத்துமாக்களில் அந்நியோன்ய கலகத்தால் அநேகரும் கனக
துற்மையால் சிலரும் மலையுச்சியில் பிறக்கும் பெருந்தீயால் பலரும்
மல்லிகார்ஜுன ஸ்வாமி நரனோடு பேசுவதால் சிலரும் நசிப்பார்
கள் தட்சிண திக்கில் காஞ்சிகாமாட்சியும் கற்னாடகத்திற் காளிகா
தேவியும் தாருக்காரணத்தில் துற்கையும், தமிழ்நாட்டில் வீரபத்திர
னும், நந்திகிராமத்தில் நாகேந்திரனும் மூத்தோர்முதலியவரளவி
லுற்ற பாபாத்மாக்களை யெல்லாம் நஷ்டப்படுத்துவார்கள். மலையின்
மிதுள்ள மல்லிகார்ச்சுனர் சன்னதியில் புகையனல் வீசுவதால் பாவி
களுக்கு பயமுண்டாகும் அதன்மேல் அஷ்ட திக்குகளுக்கும் கருப்
புக்காற்றோடி மண்டைகள் வெடிப்புண்டு கண்டமாலை அக்கினிக்
கொப்பளம் பிறந்து ஆசனத்தில் புண்ணாகி முகத்திலும் வாயிலும்
ரணங்களாகி பலர் இறப்பார்கள் விசித்திர வியாதிகள் தோன்றி
விழுந்தபடியே யெழாமல் பலர் அழிவார்கள். ஆகாசத்தில் பிறக்
கும் பெரும் ஓசையினால் சிலரிறப்பார்கள் ஆடு மாடுகள் ஆகாயத்
தைப்பார்த்து அம்மாவென்று ஓசையிடும் அப்போது பூமாதேவி
பதிலோசைதருவாள் அப்போததைப்பார்த்துசிலரிறப்பார்கள். தேவி
தேவியென்னும் சக்தி பெரும்புலிபோல் சீறுவாள் பரமேஸ்வரன்
கண்ணில் நீர்வடியும் அர்த்நாதகிரியில் காகங்கள் கத்தும் விந்தை
அதிகமாகும் பகலில் நட்சத்திரங்கள காணும் நான்கு திக்குகளி
லும் ஆகாயத்தில் ஆச்சரியமான தொனி பிறக்கும். அதனால் சில
பேர்கள் மடிவார்கள ஸ்ரீ சைலத்தில் முதலை வந்து பிரஹாதம்பாள்
கோவிலிற்சேர்ந்து இரண்டு நாளிருந்து ஆடுபோலக் கதறிப்பின்
மாயமாய்விடும். ஆதலால் சிலர் மடிவார்கள் குமாரஸ்வாமியின்
கோவிற் கதவுகள் மூடப்பட்டுப்போகும் திறந்தாலும் திறவாது
அதனால் சிலர் மடிவார்கள். மலையாளத்தில் [illegible] [illegible]லும்
மற்கடமொன்று ஜனித்து மனிதனோடு [illegible]தையாடும். வாராவா
ரம் விந்தைகள் பிறக்கும் தர்த்பதியில் ஆடு மனிதனைப்போலக்
கூவும். கங்கையும் யமுனையும் புஷ்கரமுங்கும் ராமதுர்க்கத்தில் ருனி

[illegible]

வீரதர்மத்தை வெளிக்கிடும் கும்பகோணத்தில் கோவதை செய்
வார்கள். கோலகொண்டாவில் கொக்கு பேசத்தொடங்கும் காஞ்சி
யில் உற்பாதங்கள் பிறக்கும் கருடத்துவஜம் அசைவுறும் கருமலை
யில் ஹநுமான் கோபத்தால் வளர்ந்து தரை மட்டத்திற்கு நான்கு
பனையளவு உயர்வுற்றோங்கி நிற்பார் மல்லிகார்ச்சுனஸ்வாமிகண்
ணில் நெருப்புப்பு சிந்தும் பவேசன் நடுக்கமுறுவான் அவர் வாயின்
வழி பிறக்கு மோசையாற் சிலர் மடிவார்கள் சூரியமண்டலத்திலி
ருந்து ஓர் இடி விழும் அதனால் ஆரணி வேலூர் நாசமாகும் திருப்
பதி வெங்கிடேசஸ்வாமி சந்நிதியில் மிலேச்சர்கள் புகுவார்கள்
ஆங்காங்கு கபித்துவஜங்கள் சிம்ஹநாதங்கள் பிறக்கும் ஜகத்தெல்
லாம் நடுங்கும். கருடத்துவஜங்களொடிந்து நான்கு திக்குகளிலும்
விழும் திருவள்ளூர் வீரராகவஸ்வாமிக்கு வியற்கும் ஸ்திரீகளின்
கண்களில் உதிரங்கப்பும் பெரிய ஸ்தலங்களெல்லாம் துலுக்கர்கள்
வசமாகும் துலுக்கர்கள் பெரியகோரிகள் கட்டுவார்கள். சகல
ஜனங்களும் வீரபோகவசந்தராகிய என் சரிதையிலகப்படுவார்கள்.
அமாவாசை தினம் சந்திரனுதையமாவான் அர்த்த ராத்திரியில்
சூரியன் உதையமாவான். ஆகாயம் ரத்தமயமாகும் சகல ஜாதி
யாரும் கஜானன மந்திரம் பழகுவார்கள் காட்டிலும் நாட்டிலும்
ரத்தவருஷம் பெய்யும் பட்டணங்களில் ஸ்ரீதேவி துயரப்படுவாள்
கடல் பொங்கிவரும் வீரபோக வசந்தராயர் வரப்போகிறாரென்று
பூமாதேவி சொல்லுவாள் இதன்பின் முன்னெப்படி நடந்ததோ
அந்தப்பிரகாரமாக தருமம் கலைத்து பலஜாதியார்களும் சந்தோஷ
பமிதர்களாகி யிருப்பார்கள். நானிவடம் வந்து ஆறு மாதமாச்சுது
இன்னம் யிவடமேயிருந்து கேதாரிப்பிரவேசமாகி ஸ்ரீ சாம்ப
சிவனைக்குறித்து இரண்டுமாதம் தவஞ்செய்து ஸ்ரீ ஹரியினால்
மூன்று வரங்களைப்பெற்று இந்திர நீலாவதிக்குச்சென்று ஏகாத்து
மாக்களை தரிசனஞ்செய்துகொண்டு அவர்கள் அனுக்ரகம் பெற்று
ஸ்ரீ சைலம் வந்து மல்லிகார்ச்சுனரை சேவித்து அவரனுக்கிரகத்
தால் தத்தாத்திரேயரைசசேவித்து கார்த்தவீரியார்ச்சுனன் கைக்
கங்கணத்தைக் கைக்கொண்டு பெஜவாடா சேர்ந்து அங்குள்ளவர்
களை என் வசப்படுத்திக்கொண்டு கங்காதீரஞ்சேர்ந்து அங்கென
ஆதீனர்களாகிய தர்மராஜாவினுடைய முத்திரையைக் கைப்பற்றி
96 வருடங்கள் ராச்சியபாலனஞ் செய்துகொண்டு யேக ராச்யாதி
பதியாய் ராச்சியத்தைப் பரிபாலனஞ்செய்து கொண்டு வருவேன்
துஷ்டர்கள் உடனுடியே ஹதமாகிவிடுவார்கள் மிகுதியாகிய
புண்ணிய புருஷர்கள் ராச்சியபாலனஞ் செய்துகொண்டு சுகமா
யிருப்பார்கள். மாத மும்மாரி பெய்யும் விளைவு சுபிக்ஷமாக யிருக்
கும் தருமம் நிறைந்திருக்கும் நான்குவர்ணத்தார்களும் சுகமே
யிருப்பார்கள். இந்தச்செய்தியை யாரொருவர் பூவுலகில் பிரசுரம்
செய்கிறார்களோ அவர்கள் அஷ்ட ஐஸ்வரியங்களையும் பெறுவார்

கள். இதை யெழுதச் சோம்பலாகி கர்வமுற்றி ருப்பவர்களுக்குச சகல பாவமும் சித்திருக்கும். இதை யார் பரிகாசம் செய்கிருர் களோ அவர்கள் வாயில் புழுக்களுதிரும் இதை ஆக்ஷேபணை செய்பவர்களை அல்லது பொய்யென்று நினைப்பவர்களை பெஜவாடா கனக துர்கையம்மாள் கண்டிதமாக கண்டிப்பாள் நீங்களிருவரும் உங்கள் யதாஸ்தானங்களுக்குச்சென்று இச்செய்தியைப் பிரபஞ்ச மெங்கும் வெளியாக்குவீர்களாக என்று ஸ்ரீமந்நாராயணமூர்த்தி யாகிய வீரபோக வசந்தராயர் திருவாய்மலர்ந்தருளினுர்.

இராமயோகி ஐயரும் சிதம்பர தீட்சதரும் அவ்விதமேயா கட்டுமென ஒப்புக் கொண்டு தத்தம் யாதாஸ்தானங்களுக்குச் சென்று மேற்சொல்லிய விஷயங்களை யெல்லாம் பத்திரிகை போலப் பிரசுரம் செய்தனர்.

மச்சதேசத்தைத் துரைத்தனஞ்செய்த துஷ்டாத்துமாக்கள் இப் பத்திரிகையைக்கண்டு சிற்றங்கொண்டு இவ்விருவரையும் பிடித்து வரச்செய்து இச்செய்தியை உங்களுக்குச் சொன்னவர் யார்! இவ் விதம் எழுதவேண்டிய காறணமென்ன! என்று கேட்க ஸ்ரீமந் நாரு யணமூர்த்தியே பிரசன்னமாகிவந்து இவ்வளவையும் எங்களுக்குச் சொல்லி இவ்விதம் பிரசுரம் செய்யும்படியும் சொன்னுர்" என்று இருவரும் பதிலளித்தனர். உடனே அபமூர்க்கர்கள் மிகவும் கோப ங்கொண்டு "ஸ்ரீமந் நாருயணமூர்த்தி உஙகள் முன்பு பிரசன்னமாகி யது உண்மையானுல் நாம்செய்யும் சோதனைக்குக்கட்டுப்படுவீர்கள். என்று கேட்க இவர்கள் சம்மதித்தபின் இவ்விருவரையும் இரண்டு பீரங்கிகளிளுற் சுட்டார்கள் உடனே குண்டுகளெல்லாம் புஷ்பச்செ ண்டுகளாய் இருவர் கைகளிலும் வந்திருக்கவே அம்மூர்க்கர்கள் திகிர்பட்டு நடுநடுங்கி இவர்களெழுதியபடி நடக்கும்என்று விலகிப் போயினர்.

விஷ்ணு வீரபோக வசந்தராயரென்றும், சிவம் சிதம்பரதீட்சத ரென்றும், பிர்ம்மா ராமயோகியென்றும தெரியாமல் மதாந்தராய் அபசாரம் செய்தவர்கட்கு நரகபிராப்தமாகும், இது தவருது.

## ஸ்ரீ வீரப்பிரம்ம அவர்கள் திருமுகம்.

### ஸ்ரீ வீரபோக வசந்தராய நம:

ஸ்ரீ ஜோசியர் அவர்கட்கும், சகல லோகப் பிரபஞ்சத்திற்கும் எழுதியனுப்புவித்த நிருபம்:— துந்துபிவருஷ வைகாசிமீ 13உ குரு வாரம் பூராடநக்ஷத்திரம் திரயோதசிகூடின சுபயோகசுப்தினத்தில் பரத்துவாசருடைய ஆசிரமம சேர்ந்தோம் அங்கே மகா முனீஸ் வரர்களும் சித்தாதிகளும் இருந்தார்கள், அவர்களை தரிசனம்பண்ணி னேம், அவர்களருகாமையிலேயே மகா மூர்த்தியாய் விளங்கியிருந்த

சிறு குழந்தையைப்பார்த்து அவர் யாரென்று கேட்க, அம்மகாரு
மாக்கள் சொன்னதாவது:— இந்தப்பாலகுமாரன் பிரபவவருஷ,
தில் பூமியாளுகிறதற்கு ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினுடைய அம்சமு
டையவராக காஷ்மீரமென்ற மகா தேசத்திலே ஜெயசிங்கு என்ற
க்ஷத்திரிய ராஜாவினுடைய தேவி மகா பதிவிரதை திலகாம்பாள்
வயிற்றிலேஉற்பத்தியாகிப்பிறந்தவர் இந்தப்புண்ணியபுருஷர் அதர்
வணவேதமுதலானசாஸ்திரவித்தைகளுக்கற்றறிந்தவர். அவரிவ்விட
த்திலே மூன்று வருஷமிருப்பார் அதற்கப்பால் கேதாரவனத்திலே
இரண்டு மாதம் அன்னம் புசிக்காமல் தபசு பண்ணி ஸ்ரீசாம்பசிவ
மூர்த்தியினுடைய அனுக்கிரகத்தை அடைந்துமூன்று வரங்கள் வா
ங்கிக்கொண்டு அங்கேயிருந்து குரோதன வருஷம்சித்திரை மாசம்
பூர்வபட்சமும்குருவாரமுங்கூடினசுபதினத்தில் இந்திரநீலபற்பதத்
திற்குப்போய் அங்கேயிருக்கிறமகாமுனீஸ்வரர்களைக்கண்டு தரிசன
ம் பண்ணி அவர்களண்டையில் சிறிது வரப்பிரசாதங்களையும்பெற்று
க்கொண்டு தெய்வமந்திரங்களை உபதேசம் பண்ணி மல்லிகார்ச்சுன
சுவாமியை தர்சனஞ்செய்து அவரண்டையில் சிலநாள்கழித்து துற
கையினிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு தங்கள் வம்சத்தாராகிய
தருமராசாக்கள் பட்டணத்திலிருக்கும் திரவியங்களைக்கைவசப்படு
த்தி சிம்மாசனமுங் கைக்கொண்டு இந்திரகிரி பர்வதத்தின அடிவா
ரத்திலேயிருந்து கலியாணபுரம் வரையிலும் அனந்தநகரங்களுண்டு
பண்ணி அக்ஷயவருஷம் முடிந்ததின பிறகுபிரபவவருஷ முதலாகத்
துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் பண்ணிக்கொண்டிருப்பார் அப்
போது சிமையிலே சுகசோபன கலியாணமாக இருப்பார்கள் மாதம்
மூன்றுமழைபெய்யும் பிராமணர்களெல்லாம் நித்தியகருமங்கள் சக
லமும் தாழ்ச்சியில்லாமல் நடத்துவார்கள் சில ராசாக்கள் சண்டை
பண்ணுவார்கள் சண்டைபண்ணின பேர்கள் சேதப்பட்டுபோவார்க
ள் போனவர்கள் போக இருக்கிறவாகளும் ஐம்பத்தாறு தேசத்து
தேசத்து ராசர்ககளும் நித்திய சுப சந்தோஷமாக இருந்து வாழ்
வார்கள் ஸ்ரீ ஹரிநாயணமூர்த்தியின் அவதார சித்தியாகிய ஸ்ரீவீர
போகவசந்தராய ரென்னும் இவர் ஜெகதலத்திலே மகா பிரபல்ய
மாய் இருப்பார் இதை வாசித்து எழுதி பிரபல்யம் பண்ணின
பேர்கள் ஸ்ரீ நாராயணமூர்த்தி அனுக்கிரகத்தினாலே பூரண ஆயிசு
டைய வராகிச் சகல சம்பத்தும் பெற்று வாழ்ந்திருப்பார்கள். இந்த
மகிமையை எழுதாமல் மாறினாலும் பிரபல்யமாய்ச் சொல்லாமற்
போனாலும் மகத்தாகிய பிரம்மஹத்தி தோஷத்தை அடைவார்கள்.
இந்த சரித்திரம் எவரண்டையிலிருந்தாலும் அவர்கள் காரியம்
அனுகூல ஜெயமாகும்.

ஸ்ரீ வீரப்ரம்ம நமஸ்து.

முற்றிற்று,

182472

கடவுள் துணை.

# புஸ்தகவிளம்பரம்

கல்வியிற்சிறந்த சனதனவான்களே!

நமது கம்பெனி பிரபலமாகும்பொருட்டு அடியிற்கண்ட புஸ்தகங்களை சரசமான விலைக்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

1. விடாநகைப்பு அல்லது விடிய விடிய சிரிக்கும் கதை ஒருதாசில்தாரிடம் தவசிப்பிள்ளை வேலை பார்த்த தடிக்கோபாலன் கதை விலை பைசா 6

2. செம்புலிங்க நாடார், காசி நாடார் இவர்களிருவரும் சிவலோகமடைந்த சிங்கார வேடிக்கைச்சிந்து பைசா 6

3. மன்னார்குடி ஹெட்மாஸ்டர் செல்வலிங்கம் பிள்ளையின் கல்யாணத்தில் பெண் மாப்பிள்ளையோடு ஆறுபேர் கத்திக்குத்தால் மாண்ட விபரீத கடுங்கொலை வேடிக்கைச்சிந்து விலை பைசா 6

4. ஜெகமெங்கும்புகழ்பெற்ற நாடகக் கம்பெனிகளில் தேர்ந்த ஆக்டர்கள் பாடிவரும் ஆண் பெண் தர்க்கம் மோகனராஜன் பாட்டுப்புஸ்தகம் 0—0—6

5. நாகூர் ஷாகுல் ஹமீது ஆண்டவரவர்கள் பேரில்பாடிய பரமானந்தக் கீர்த்தனை விலை பைசர் 6

6. திருச்செந்தூருக்குப் புதிதாக ரெயில் போட்டவழிநடைத்தெம்மாங்கு விலை பைசா 6

7. வேதநாயகம்பிள்ளையவர்கள் பாடியசர்வ சமயசமரச கீர்த்தனை புஸ்தகம் 1க்கு விலை பைசா 6

8. 1922 ௵ டிசம்பர் ௴ முதல் தேதி மதுரை வைகையாற்றின் வெள்ள விபரீத வேடிக்கைச்சிந்து விலை பைசர 6

9. 1923 ௵ டிசம்பர் ௴ 16 தேதியில் திருநெல்வேலியில் ஏற்பட்ட வெள்ளப்பிரளைய அற்புத வெள்ளச்சிந்து விலை பைசா 6.

மேற்கண்ட புஸ்தகங்களை நோட்டீஸ் கொடுப்பவரிடம் பெற்றுக் கொள்ளலாம்

---

விக்டோரியா பிரஸ், மதுரை 24